அலைகள் தொடுகின்ற நிலையில் இருக்கிற காரணத்தினால், உறுதியான அளவுக்கு கடல் அலைகளைத் தடுப்பதற்காக உயர்ந்த கரை அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அந்த நல்ல யோசனைகளையெல்லாம் மத்திய அரசு தொல் பொருள் ஆராய்ச்சித் துறை மேற்கொள்ள வேண்டும்.

திரு. எம். தேவராசன் : தலைவர் அவர்களே, இந்தக் கடலோரக் கோவில்களில் குடிகொண்டுள்ள தெய்வங்கள் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்ள முடியாததுபோல், நாம் ஏன் இந்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அந்தத் தெய்வங்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் தான், மனிதர்களைத் தூண்டி விட்டு, இந்தக் காரியங்களையெல்லாம் செய்யச் சொல்கின்றன. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி * இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்]

2. அவையுரிமைப் பிரச்னை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு அப்துல் ஜப்பார் அவர்கள் ஒரு 'மாட்டர் ஆப் பிரிவிலேஜ்' பற்றி நோட்டீஸ் கொடுத்திருக்கிறார்கள். அதை அவர்கள் படிப்பதற்கு நான் அனுமதிக்கிறேன்.

THIRU V. M. ABDUL JABBAR : Honourable Mr. Speaker, Sir, Under Rule 184 of the Tamil Nadu Legislative Assembly Rules, I give notice for raising the following matter of breach of privilege against Thiru O. N. Sundaram, a Member of this House and against the Tamil Daily, 'Nathigam'.

1972 மார்ச் 28]

In its issue dated the 28th March 1972 under the heading—
" ஊழல் விசாரணை நடைபெற்றால் கருணாநிதி பதவி பறி போகும் "

wherein it has been stated as follows :

"இப்படி ஹாண்டே சட்ட மன்றத்தில் கேட்கும்போது அங்கே உள்ள உறுப்பினர்கள் ஊளையிடுகிறார்கள். சட்ட சபையில் இப்படி நடக்கிறது."

This is certainly a reflection on the Members of this House and constitutes breach of privilege. I, therefore, request that this may be taken up for consideration by the House. Thank you, Sir.

MR. SPEAKER : I would like to know the views of some of the Leaders of Parties. Dr. Hande.

DR. H. V. HANDE : Sir, my submission is that these matters need not be brought before the House as privileges at all. For, so many things happen in the Press and so many times people give speeches and they are published by papers of both the Ruling Party and the Opposition Parties. They have each their own characteristic way of reporting these things. We do not know what exactly was the speech given by the Hon. Member and we do not know what has been reported. He might have said one thing and the paper might have published quite another thing. As a matter of fact, people do shout and we have been witnessing shouting by members. It is not only in this House, but in Parliament and other Legislatures also we see members shouting. That is the fundamental right of the members and there is nothing seriously wrong about it.

I personally feel that this need not be magnified and a situation created wherein such suggestions are given to members to do such things. For that matter, particularly I am not upset in the House and I am quite satisfied with our House also ; we are conducting our affairs in a much better way than many other Houses. Shouting is here; it is not only here, it is in Parliament also. It is the right of the members to shout. The right of the members cannot be questioned.

We do not know what exactly Mr. O.N. Sundaram said ; but he would be perfectly right to say so when members get up sometimes and say something, other members of the Ruling Party say something against and there is shouting at times. In all these

[1972 மார்ச் 28

matters, my personal feeling is that this is a normal thing and there is no case of *prima facie* breach of privilege in this issue at all.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அந்தப் பேச்சைப் பேசினதாகக் கூறப்படுகிற உறுப்பினர் அவர்கள் இங்கே இருக்கிறார்கள். தான் இப்படிப் பேசினார்களா, இல்லையா என்பதை அவர்களே அறிவித்துவிட்டால், தாங்கள் தீர்ப்பு வழங்குவதற்குக் கூட இன்னும் சாதகமாக இருக்கும் என்று கருதுகிறேன். அவர்கள் கருணாநிதி ராஜிநாமா செய்ய வேண்டும் என்று சொன்னதெல்லாம் உரிமைப் பிரச்சினையின்கீழ் வரும் என்று நான் கருதவில்லை. ஏனென்றால், அவர்களுக்கு இருக்கிற உரிமை அது. நான் இருக்க வேண்டும், அல்லது ராஜி நாமா செய்ய வேண்டும் என்று சொல்வது அவர்களுக்கு இருக்கிற உரிமை. ஆகவே, அதை உரிமைப் பிரச்சினை என்று நான் கருத வில்லை.

ஆனாலும், சட்டமன்ற உறுப்பினர்கள் ஊளையிடுகிறார்கள் என்று சொல்வது, அவ்வளவு இங்கிதமான வார்த்தையாக எனக்குத் தெரியவில்லை. திராவிட முன்னேற்றக் கழகச் சட்டமன்ற உறுப்பி னர்கள் ஊளையிடுகிறார்கள் என்று சொன்னால் கூட, ஏதோ அரசியல் ரீதியில் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களைப் பற்றி இப்படிச் சொல்கிறார்கள், ஆகவே அவர்களுக்குப் பாதகமானது என்று கூட விவாதிக்கலாம்.

பொதுவாக டாக்டர் ஹாண்டே சட்ட மன்றத்தில் பேசும் போது அங்கே உள்ள உறுப்பினர்கள் ஊளையிடுகிறார்கள் என்று சொன்னால், அது எல்லோரையும் சேர்த்துப் பொதுவாகச் சட்ட மன்ற உறுப்பினர்கள் என்று சொல்கிறார்கள் என்றுதான் எண்ணப்பட வேண்டியிருக்கிறது. அவர்களோடு பேசியும், பழகியும் பார்த்திருப்பதில், அவர் இப்படிப் பேசுபவராகத் தெரிய வில்லை. இந்தச் செய்தியை வெளியிட்டிருக்கிற பத்திரிகையும் அவர்களுடைய கட்சியைச் சார்ந்தது. ஒருவேளை அவர் இப்படிப் பேசினாரா, இல்லையா, என்ன பேசினார் என்று அவரே சொல்லி விட்டால், மற்றவர்கள் அபிப்பிராயம் சொல்வதற்கும், தலைவர் அவர்கள் தீர்ப்பு வழங்குவதற்கும் எதுவாக இருக்கும்.